# ஆசிரியர் வீரமணியார் வாழ்க! வாழ்கவே!!



(ஆசிரியருடன், பேராசிரியர்.மு.நாகநாதன், "சாதி பெருமை" நூலாசிரியர் மனோஜ் மிட்டா)

12 அகவையிலே பெரியாரைப்
போற்றிய மாணவ மணி!

அண்ணாமலை
பல்கலைக்கழகத்தில்
பொருளாதாரம் கற்றுத் தேர்ந்து,
முதல் பரிசை வென்ற தங்கமணி!

தந்தை பெரியாரின்
அழைப்பை ஏற்று
வருமானம் ஈட்டும் வழக்கறிஞர்
தொழிலைத் துறந்து
விடுதலைப் பொறுப்பேற்ற
ஆசிரிய மணி!
சாதியை முறியடித்து
மோகனா அம்மாவை
மணந்த மாமணி!

பெரியார் அமைத்த
அனைத்து களங்களிலும்
பங்கு பெற்ற வீரமணி!

சிறைவாசத்திற்கு அஞ்சாத மணி!
மிசா கொடுமையை
அச்சமின்றி ஏற்ற கொள்கை மணி!

சிறையிலும் எழுத்துப் பணி
தொடர்ந்த உயர் கல்வி மணி!

அண்ணன் மாறன் சிறையில்
படைத்த 'திராவிட வரலாறு'
என்ற நூலுக்குக் குடியரசுத் தரவுகளை,
வழங்கிய ஆய்வு மணி!

பொய்யையும் புரட்டையும்
அடுக்குமுறை சாதியையும் புகுத்திய,
'கீதையின் மறுபக்கம் ' கண்டு,
மறுப்பு நூல் எழுதி,

சனாதன சதியை
முறியடித்த சிந்தனை மணி!

சீர்மிகு வாழ்வியலைச்
சுவைக்கும் வண்ணம்
தேன் அருவியாகத் தரும் தமிழ் மணி!

அரசியலை, அறிவியலைச்
சட்ட நெறிமுறைகளைக் கசடறக் கற்றுத்
தீர்ப்பு எது? தீர்வு எது? என்று
அன்றாடம் ஒலிக்கும் அறிவு மணி!

ஆலயம் தோறும் ஒலிப்பது
ஆரிய மணி!
விடுதலையில் ஒலிப்பது
திராவிட மணி!

பெரியார் கண்டெடுத்த வைரமணி!

பேரறிஞர் அண்ணா போற்றிய
பகுத்தறிவு மணி!

அன்றைய முதல்வர் கலைஞருக்குத் துணை
நின்ற பண்பு மணி!

அன்னை மணியம்மையார்
தலைமை ஏற்ற ஆளுமை மணி!

இன்றைய முதல்வர்
திராவிட நல்லாட்சி தரும்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்குப்
பாதுகாவல் அரணாக
நிற்கும் அன்புமணி!

93 அகவையிலும்
ஊர் தொடங்கி,
உலக நாடுகள் வரை
பெரியாரிய உயர் எண்ணங்களை

உலகமயமாக்கும் உன்னத மணி

பெரியாரின் சுயமரியாதை மணி

எங்கள் ஆசிரியர் வீரமணியார்

பல்லாண்டுகள் வாழ்க! வாழ்க!!

**பேராசிரியர்**
**மு. நாகநாதன்**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (2.12.2025) மாநகராட்சி கூட்டரங்கில், கனமழை காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, இ. பரந்தாமன் எம்.எல்.ஏ., கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், துணை மேயர் மு.மகேஷ்குமார், அரசு உயர் அதிகாரிகள் தா.கார்த்திகேயன், ஜெ.குமரகுருபரன், டி.ஜி.வினய், உள்பட அரசு உயர் அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### 5வது மண்டலம் அன்னை சத்யா நகர் – திருவள்ளுவர் நகரில்

## டிட்வா புயல் கனமழை காரணமாக மருத்துவ முகாம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்!



சென்னை, டிச.3-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று (2.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட காமராஜர் சாலை, தலைமைச் செயலகம் எதிரே அமைந்துள்ள 60-வது வார்டு, அன்னை சத்யா நகர் மற்றும் பிராட்வே, பிரகாசம் சாலை, 56-வது வார்டு, திருவள்ளுவர் நகரில் டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையினால் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கொட்டும் மழையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அப்பகுதி மக்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருவதை உறுதி செய்து, அவர்களிடம் குறைகளை கேட்டறிந்து, மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு, நோய் தொற்று பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக உடனடியாக அப்பகுதியில் மருத்துவ முகாம்களை அமைக்குமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

அன்னை சத்யா நகர் பகுதி மக்களை எங்களின் ஒருபகுதியென உணர்ந்து, எவ்வளவு சிறிய மழை ஏற்பட்டாலும் உடனடியாக களத்திற்கு வந்து, தினம் தினம் பெருகிக்கொண்டிருக்கும் சூழ்நிலைச் சவால்களை தீர்ப்பதற்கான ஆய்வுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறோம்.

சில இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளதை கருத்தில் கொண்டு, அதனை உடனடியாக அகற்றுவதற்காக பெருநகர மாநகராட்சியும், குடிநீர் வழங்கல் துறையினருடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்று காலை பொங்கல் உணவாக வழங்கப்பட்டது. மேலும், இந்த மழை நிற்கும் வரையிலும் மக்களுக்கு இடையுறாத உணவு வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதல்வர் நேற்று மதியம்முதல் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளிலும், மழையின் காரணமாக வேலைக்கு செல்ல முடியாத குடும்பங்களும் உணவு வழங்க வேண்டும் என உத்தரவு வழங்கியுள்ளார்.

பெருமழை நின்றதும், இந்த பகுதியில் வசிக்கும் 950 குடும்பங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழக்கம்போல் நிவாரண உதவிகள் வழங்கப்படுவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலும் மொத்தம் 1,215 கிலோமீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இதன் விளைவாக பெரும்பாலான இடங்களில் நீர்தேங்கல் நிகழவில்லை. எனினும் சில தாழ்வான தெருமுனைப் பகுதிகளில், குறிப்பாக சோழிங்கநல்லூர் மற்றும் மகாலிங்கபுரம் போன்ற இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது.

டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையினை சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து:

இந்த தாழ்வான பகுதிகளில் ஏற்படும் மழைநீர் தேக்கத்தை விலக்கு வதற்காக, தேங்கும் இடங்களை அடையாளம் கண்டு, அங்கு தற்காலிக மின் மோட்டார்களை அமைத்து, பம்புகளின் உதவியுடன் நீரை வெளியேற்றி முக்கிய கால்வாய்களில் செலுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இந்த மழையிலும் நீர்தேங்கல் மிகக் குறைவாக உள்ளது.

எங்கள் 'திராவிட மாடல்' ஆட்சியின் தலைவர் அவர்களின் உத்தரவின் பேரில், கழகத் தோழர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என அனைவரும் முழுமையாக களத்தில் செயல்பட உத்தரவிடப்பட்டுள்ளனர். அந்த வேண்டுகோளை ஏற்று, மக்களோடு மக்களாக இருந்து சேவை செய்வதை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் விஜய்பாபு, மாமன்ற உறுப்பினர் பரிமளம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பல நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கில் சலுகை காட்டும் ஒன்றிய அரசு

## வேலைவாய்ப்புகளை சரிபார்க்க எடுக்கப்படும் நடவடிக்கை என்ன?

### நாடாளுமன்றத்தில் – ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி!



புதுடெல்லி, டிச.3-

நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கில் சலுகை; ஆனால், உருவாகும் வேலைவாய்ப்புகளை சரிபார்க்க எந்த அமைப்பும் இல்லை என நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அளித்த அலட்சிய பதில்களுக்கு எம்.பி. கே.இ. பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எஃகுத் துறையில் 'Speciality Steel' தயாரிப்பை ஊக்குவிப்பதற்காக, இந்திய நிறுவனங்களை Production Linked Incentive (PLI) திட்டத்தில் இணைத்து, ரூ.6,322 கோடி மக்கள் வரிப்பணத்தைச் சலுகையாக வழங்கிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. இதன் மூலம் 30,000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் ஒன்றிய அரசு வாக்குறுதி தந்துள்ளது.

இந்த நிலையில், அந்த 30000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதை எப்படி சரிபார்ப்பது என்றும், அந்த வேலைவாய்ப்புகள் தற்காலிகமானதா, நிரந்தரமானதா என்பதை அறிவது குறித்தும், நாடாளுமன்றத்தில் எஃகு அமைச்சகத்திடம் கேள்விகள் எழுப்பினேன்.

1. ரூ.6322 கோடி சலுகை; ஆனால், வேலைவாய்ப்புகளை சரிபார்க்க எந்த வழிமுறையும் இல்லை:

'Speciality Steel' தயாரிப்பில் இறங்கும் நிறுவனங்களுக்கு, PLI திட்டத்தின் கீழ் ரூ. 6,322 கோடி சலுகை வழங்குவதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இத்தனை கோடி சலுகை வழங்குவதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக, 30,000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளது. இது மூன்றாம் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இது வரை 13,284 வேலைவாய்ப்புகள் உருவாகியிருப்பதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

ஆனால், ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் அளித்திருக்கும் பதிலில், வேலைவாய்ப்புகளை சரிபார்க்க எந்த வழிமுறையும் இல்லை என்று கூறியுள்ளது.

சரியான சரிபார்ப்பு முறை இல்லாத பட்சத்தில், நிறுவனங்கள் உண்மையான கணக்கைத் தான் சொல்கின்றன என்பதை எப்படி நம்புவது? இப்போது அறிவித்துள்ள கணக்குமே சரியானது தானா என்ற சந்தேகமே எழுகிறது.

2. "நாங்கள் வெறும் Facilitator": கடமையில் இருந்து நழுவும் ஒன்றிய அரசின் தந்திரம்

ஒன்றிய அரசு அளித்துள்ள பதிலில், PLI திட்டத்தை பொறுத்தவரை தன்னை வெறும் Facilitator என்று அறிவித்துள்ளது. ஆனால், 6322 கோடி மக்கள் வரிப்பணத்தை சலுகையாக கொடுக்கும் போதும், 30000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று பெருமையாக சொல்லும்போதும், தன்னை முதல் வரிசையில் அமர்த்திக் கொண்டது ஒன்றிய அரசு.

ஆனால், வேலைவாய்ப்பை சரிபார்க்க என்ன வழிமுறை என்று கேட்கும் போது மட்டும், "நாங்கள் வெறும் Facilitator " என்று கூறி நழுவுகிறது ஒன்றிய அரசு.

3. உருவாகும் வேலைவாய்ப்புகளும் தற்காலிகமானதா, நிரந்தரமானதா எனத் தகவல் இல்லை:

PLI திட்டத்தில் உருவாகும் வேலைவாய்ப்புகளின் 'நீண்ட கால நிலைத்தன்மை' (Sustainability) குறித்த கேள்விக்கு, ஒன்றிய அரசு பொறுப்பற்று மௌனத்தை பதிலாக தந்துள்ளது. இந்த மௌனம், இதுவரை உருவானதாக ஒன்றிய அரசு அறிவித்த வேலைவாய்ப்புகள் மற்றும் இனி உருவாகும் வேலைவாய்ப்புகள், நிரந்தரமானதா அல்லது திட்டம் முடிவதற்குள் காலாவதியாகிவிடுமா என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

**எனது கோரிக்கை:**

சட்டப்பூர்வச் சரிபார்ப்பு கட்டாயம்:

PLI திட்டத்தின் கீழ் எஃகு துறையில் உருவாக்கப்படும் ஒவ்வொரு புதிய வேலைவாய்ப்பும் அரசு தரவுகளுடன் கட்டாயமாகச் சட்டப்பூர்வமாக இணைக்கப்பட்டு, மூன்றாம் தரப்பு தணிக்கை (ThirdParty Audit) செய்யப்பட வேண்டும்.

நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கில் சலுகைகளை அள்ளிக்கொடுப்பதில் இருக்கும் ஈடுபாட்டை, அதில் மக்களுக்கு நேரடியாக பயன்படும் வேலைவாய்ப்புகளின் மீது இருக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சரின் பதிலுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

## பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் வெள்ள நிவாரணப் பணிகள்!

### இ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு!

பல்லாவரம், டிச. 3

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2க்கு உட்பட்ட பகுதிகளில் டிட்வா புயலால் கன மழை தொடர்ந்து பெய்து வருவதால் வெள்ள நிவாரண பணிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ கருணாநிதி எம்எல்ஏ அதிகாரிகளுடன் ஒவ்வொரு பகுதியாக சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பல்லாவரம் பான்ஸ் மேம்பாலம் கீழே ஜி. எஸ். டி .சாலையில் ஒவ்வொரு போதும் மழை நீர் தேங்கி சாலை நிற்கும் தற்போது ஜி. எஸ். டி. சாலையில் பணிகள் மழை நீர் கால்வாய் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இந்த முறை பெய்த கனமழையின் போதும் ஜிஎஸ்டி சாலையில் மழை நீர் தேங்காமல் கால்வாய் வழியாக நீர் வெளியேறி வெளியேறுகிறதா என்பதை ஆய்வு மேற்கொண்டு இதே போல் சாலையில் நீர் தேங்காாமல் கால்வாய் வழியாக நீர் வெளியேறுவதை அதிகாரிகள் தொடர்ந்து ஆய்வு செய்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பழைய பல்லாவரம் திருவள்ளூர் நகரில் ஒவ்வொரு கனமழையின் போதும் சாலையில் நீர் தேங்கி நிற்கும்தற்போதுதிருவள்ளுவர் நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரணத்தினால் சாலையில் நீர் தேங்காமல் கால்வாய் வழியாக வெளியேறுவதை ஆய்வு மேற்கொண்டு கால்வாய் பயிர்களை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

அதை தொடர்ந்து ஜமீன் பல்லாவரம் பழைய பல்லாவரம் பகுதிகளில் உள்ள மழை நீர் கால்வாய் வழியாகச் செல்லும் மழை நீர் மூவரசம்பேட்டை ஏரில் சென்று கலக்காமல் வழியில் கால்வாய் பழுதடைந்து வெளியேறிய வெளியேறிக் கொண்டிருந்தன தற்போது அந்த கால்வாய்கள் சரி செய்யப்பட்டு புதிய கால்வாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று முடிந்தன கால்வாய் வழியாக மழை நீர் முழுமையாகச் சென்று ஏரியில் கலைக்கின்றதா என்பதை ஆய்வு மேற்கொண்டு அடிக்கடி கால்வாய் சுத்தம் செய்து மழைநீர் தடையின்றி செல்ல வழிவகை செய்யுமாறு மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

அதைத்தொடர்ந்து கீழ் கட்டளை கங்காதரன் தெருவில் மின்மாற்றி டிரான்ஸ்பாரம் கீழே சரிந்து விழுந்தது என்பதை தகவல் அறிந்து நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு உடனடியாக மின்சாரத்துறை அதிகாரிகளை வரவைத்து மின் மாற்றி சரி செய்து பணிகளை மேற்கொண்டு உடனடியாக மின்சார வழங்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

சட்டமன்ற உறுப்பினர் ஆய்வு மேற்கொண்டதை பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வெகுவாக வரவேற்றனர் அப்பொழுது மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை மாநகராட்சி அதிகாரிகள் மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.



தென் சென்னை மாவட்டத்தில் மண்டலம் 9 முதல் 15 வரை உள்ள 128 பயனாளி தம்பதிகளுக்கு திருமண நிதி உதவி திட்டங்களின் கீழ் 8 கிராம் தங்க நாணயம் மற்றும் அதிகபட்சம் 50,000 வரை நிதி உதவி வழங்கும் விழா அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர் எம்.ஸ்ரீதர் எம்.சி., மாவட்ட சமூக நல அலுவலர்கள் வெ. முத்து செல்வி, செல்வி.ம. ஹரிதா, கிண்டி வட்டாட்சியர் பிரசில்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை, ஈ.வி.கே சம்பத் மாளிகையில் தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரிய அலுவலக கட்டிடத்தை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார். உடன் அயலகத் தமிழர் நல வாரிய தலைவர் கார்த்திகேய சிவ சேனாதிபதி, நல வாரிய ஆணையர் வள்ளலார் சிங்கப்பூர் ராம், துபாய் மீரான், லண்டன் பைசல், புகழ் காந்தி, மும்பை மீரான், பழ.செல்வகுமார், சி.ஜெரால்டு, ப.ச.கமலேஷ், அதிகாரிகள் உள்ளனர்.